பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
12 07 2025 **SATURDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசின் பல்வேறு துறைகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 51 ஆயிரம் பேருக்கு பணிநியமன ஆணைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வழங்குகிறார்.

2. மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இரண்டு நாள் பயணமாக கேரளா சென்றுள்ளார்.

3. அஹமதாபாத் விமான விபத்து தொடர்பான முதற்கட்ட விசாரணை அறிக்கையை விமான விபத்து புலனாய்வுப் பிரிவு வெளியிட்டுள்ளது..

4. பீகாரில் 74 சதவீதத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கான கணக்கெடுப்பு படிவங்களை சமர்ப்பித்துள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

5. இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் 3 விக்கெட் இழப்புக்கு 145 ரன் எடுத்தது.

>>>>>>><<<<<<<

மத்திய அரசின் பல்வேறு துறைகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 51 ஆயிரம் பேருக்கு பணிநியமன ஆணைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வழங்குகிறார்.

புதுதில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு காணொலி வாயிலாக அவர்களிடம் பிரதமர் உரையாற்றவுள்ளார்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்ற பிரதமரின் உறுதிப்பாட்டை நிறைவேற்றும் வகையில் வேலைவாய்ப்பு திருவிழாக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

16வது முறையாக நடைபெறும் இந்த விழாவில் ரயில்வே, உள்துறை, சுகாதாரம், தொழிலாளர் நலன், அஞ்சல் உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு துறைகளுக்கு 51 ஆயிரம் பேர் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

நாடுமுழுவதும் இதுவரை நடைபெற்ற வேலைவாய்ப்பு திருவிழாக்களில் 10 லட்சத்திற்கும் அதிகமானோருக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை, ஐசிஎப்-ல் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்து கொண்டு பணிநியமன ஆணைகளை வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் ஐசிஎப் பொதுமேலாளர் திரு. சுப்பாராவ் உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த உயரதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

>>>>>>><<<<<<<

மத்திய உள்துறை அமைச்சரும், பிஜேபி மூத்த தலைவருமான திரு. அமித் ஷா இரண்டு நாள் பயணமாக கேரளா சென்றுள்ளார்.

திருவனந்தபுரம் விமான நிலையத்தில் நேற்றிரவு அவரை மாநில பிஜேபி தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் வரவேற்றனர்.

அம்மாநில தலைநகரில் இன்று நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்கிறார்.

இன்று காலை திருவனந்தபுரத்தில் பிஜேபியின் மாநில தலைமை அலுவலகத்தை அவர் திறந்து வைக்கிறார்.

பின்னர், வாக்குச்சாவடி அளவிலான பிஜேபி தொண்டர்கள் மத்தியில் திரு. அமித் ஷா உரையாற்றவுள்ளார்.

>>>>>>><<<<<<<

அஹமதாபாத் விமான விபத்து தொடர்பான முதற்கட்ட விசாரணை அறிக்கையை விமான விபத்து புலனாய்வுப் பிரிவு வெளியிட்டுள்ளது.

கடந்த மாதம் 12ஆம் தேதி நிகழ்ந்த இந்த விபத்தில் 260 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட விமான விபத்து புலனாய்வுப் பிரிவு 15 பக்க முதற்கட்ட அறிக்கையை நேற்று வெளியிட்டது.

ஏர் இண்டியா விமானம் விபத்துக்குள்ளானதற்கான காரணங்களை ஆராய்ந்த புலனாய்வுப் பிரிவு, விமானம் புறப்பட்ட சில நொடிகளில் விமானத்தின் இயந்திரங்களுக்கான எரிபொருள் துண்டிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

மேலும், இந்த விமானத்தின் இரண்டு எஞ்சின்களும் இயங்கத் தொடங்கி, ஒரு வினாடி இடைவெளியில் அடுத்தடுத்து அணைக்கப்பட்டதாகவும், இதனால் இந்த விபத்து நிகழ்ந்ததாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானிகளில் ஒருவர் மற்றொரு விமானியிடம் விமான எரிபொருளுக்கான விநியோகத்தை ஏன் நிறுத்தினீர்கள் என்று விவாதிக்கும் குரல்பதிவு விமானி அறையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கு மற்றொரு விமானி, தான் அவ்வாறு செய்யவில்லை என்று பதிலளித்துள்ளார்.

பின்னர், எரிபொருள் கட்டுப்பாட்டு கருவிகள் அடுத்தடுத்து இயக்கப்பட்டதாகவும், ஆனால், விமானத்தின் ஒரு எஞ்சின் அதன் வேகத்தை குறைத்த போது, அதை கட்டுப்படுத்த முடியாமல் போனதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

செவித்திறன் குறைபாடு உடையோர் ஆங்கில மொழித்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்று மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை செயலர் திரு. ராஜேஷ் அகர்வால் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்திய சைகை மொழியைப் பயன்படுத்தி, செவித்திறன் குறைபாடு உடைய மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பது குறித்த தேசிய பயிலரங்கில் பேசிய அவர், சைகை மொழி, செவித்திறன் குறைபாடு உடையோரின் கல்வி மற்றும் முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றுவதாக கூறினார்.

செவித்திறன் குறைபாடு உடையோருக்கான கல்வியில், தொழில்நுட்பத்தின் அவசியத்தையும் திரு. ராஜேஷ் அகர்வால் வலியுறுத்தினார்.

இந்திய சைகை மொழி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற இந்தப் பயிலரங்கில் நாடுமுழுவதிலுமிருந்து செவித்திறன் குறைபாடு உடையோர் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

>>>>>>><<<<<<<

ரயில்வே பணிகளுக்கான ஆள்சேர்ப்பு நடவடிக்கை, வெளிப்படையாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரயில்வே பணிகளுக்கு விண்ணப்பம் செய்வதற்கான நடைமுறையை எளிதாக்குவதற்கு ஒருமுறைப் பதிவு செய்யும் நடைமுறை உட்பட விண்ணப்பதாரர்களுக்கு உகந்த வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

குரூப்-சி மற்றும் குரூப்-1 பணியிடங்களுக்கான ஆள்சேர்ப்பு குறித்த வருடாந்திர நாட்காட்டி கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதோடு, ஆள்சேர்ப்பு குறித்த அறிவிப்பு முதல் இறுதித்தேர்வு வரையிலான காலக்கெடுவை உரிய நேரத்தில் தெரிவிப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தேர்வுகளை நடத்தும் போது முறைகேடுகள் நடைபெறாமல் இருக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

பீகாரில் 74 சதவீதத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கான கணக்கெடுப்பு படிவங்களை சமர்ப்பித்துள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

மொத்தம் உள்ள 7 கோடியே 90 லட்சம் வாக்காளர்களில் கடந்த 17 நாட்களில் 74 சதவீதத்திற்கும் அதிகமானோர் படிவங்களை தாக்கல் செய்துள்ளனர்.

இம்மாதம் 25ஆம் தேதிவரை படிவங்களை சமர்ப்பிக்கலாம் என்று ஆணையம் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<<

இந்தியாவில் இருந்த மராட்டிய ராணுவ நிலப்பரப்பு யுனெஸ்கோ உலக பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

மதிப்புமிக்க இந்த அங்கீகாரத்தை பெறும் இந்தியாவின் 44வது சின்னமாக இது கருதப்படுகிறது.

பாரிஸில் உள்ள யுனெஸ்கோ தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற உலக பாரம்பரிய குழுவின் 47வது அமர்வின் போது, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

17ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த மராட்டிய அரசின் நிலப்பரப்பு, தமிழ்நாட்டின் செஞ்சிக்கோட்டை வரை பரவியிருந்தது.

மகாராஷ்ட்ராவில் உள்ள **Salher, Shivneri, Raigad,** தமிழகத்தில் செஞ்சிக்கோட்டை உள்ளிட்ட 12 இடங்கள் யுனெஸ்கோவின் இந்த அறிவிப்பில் இடம்பெற்றுள்ளன.

>>>>>>><<<<<<<

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் அடுத்த மாதம் 2 மற்றும் 3ஆம் தேதிகளில் தமிழக அரசின் சார்பில் வல்வில் ஓரி திருவிழா மற்றும் மலர் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இதற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ்பைட் - கண்ணன் 45 செகண்டஸ்)

>>>>>>><<<<<<<

அமர்நாத் புனித யாத்திரைக்காக 6 ஆயிரத்து 639 பேர் கொண்ட 11வது குழுவினர் இன்று அதிகாலை ஜம்முவில் உள்ள பகவதி நகரிலிருந்து பலத்த பாதுகாப்புடன் புறப்பட்டுச் சென்றனர்.

கஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள பால்தால் மற்றும் பஹல்காம் முகாம்களை நோக்கி, 275 வாகனங்களில் இவர்கள் புறப்பட்டுச் சென்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பால்தால் முகாமில் உள்ள 4 ஆயிரத்து 302 யாத்ரிகர்கள், பஹல்காம் முகாமை நோக்கி புறப்பட்டனர்.

இவர்கள் தொடர்ந்து பயணம் மேற்கொண்ட, புனித அமர்நாத் குகையில் உள்ள பனிலிங்கத்தை தரிசனம் செய்வார்கள்.

இதற்கிடையே, நேற்று மட்டும் 18 ஆயிரம் பேர் பனி லிங்கத்தை தரிசித்ததாகவும், இதுவரை ஒரு லட்சத்து 63 ஆயிரம் யாத்ரிகர்கள் தரிசனம் செய்துள்ளதாகவும் அதிகாரிகள் கூறினர்.

\>>>>>>><<<<<<<

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று இந்தியா முதல் இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் 3 விக்கெட் இழப்புக்கு 145 ரன் எடுத்தது.

கே.எல். ராகுல் 53 ரன்னுடனும், ரிஷப் பந்த் 19 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக, இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 387 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

\>>>>>>><<<<<<<

இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஐந்தாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

பர்மிங்காமில் இந்தப் போட்டி இரவு 11 மணிக்கு தொடங்குகிறது.

\>>>>>>><<<<<<<

இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையே 19 வயதுக்குட்பட்டோருக்கான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று **Beckenham**-ல் பிற்பகல் 3.30 மணிக்கு தொடங்குகிறது

\>>>>>>><<<<<<<

தேசிய மகளிர் சப்ஜூனியர் ஹாக்கி போட்டியின் அரையிறுதிக்கு ஹரியானா, ஒடிசா, மிஸோராம், ஜார்க்கண்ட் ஆகிய அணிகள் முன்னேறியுள்ளன.

\>>>>>>>**END**<<<<<<<